செய்தி வெளியீடு எண்: 713 நாள்:23.10.2019

# மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி K.பழனிசாமி அவர்கள் ஒரே நேரத்தில் 6 அரசு மருத்துவ கல்லூரிகளுக்கு அனுமதி அளித்த மாண்புமிகு பாரத பிரதமர் அவர்களுக்கு நன்றி தெரிவித்து அறிக்கை – 23.10.2019

தமிழ்நாட்டில் அரசு மருத்துவ கல்லூரி இல்லாத மாவட்டங்களான விருதுநகர், இராமநாதபுரம், திண்டுக்கல், நாமக்கல், திருப்பூர் மற்றும் நீலகிரி ஆகிய ஆறு மாவட்டங்களில் அரசு மருத்துவக் கல்லூரி அமைக்க மத்திய அரசின் அனுமதியும், மத்திய அரசின் திட்டத்தின் கீழ் நிதியுதவியும் வழங்க மாண்புமிகு பாரத பிரதமர் அவர்களிடம் நான் கோரிக்கை வைத்து, அதற்கான முன்மொழிவுகளை குறுகிய காலத்தில் தமிழ்நாடு அரசால் மத்திய அரசுக்கு அனுப்பி வைக்கப்பட்டது. மத்திய அரசு கோரியபடி மேற்படி மாவட்டங்களில் அரசு மருத்துவ கல்லூரி அமைக்க உடனடியாக இடங்கள் ஒதுக்கீடு செய்யப்பட்டன. இதனை தொடர்ந்து, விரைவான நடவடிக்கை மேற்கொண்டு, உடனடியாக புதிய மருத்துவ கல்லூரிகளுக்கு அனுமதி வழங்க மத்திய அரசிடம் கோரிக்கை வைத்தேன். எனது கோரிக்கையினை ஏற்று திருப்பூர், நீலகிரி, இராமநாதபுரம், நாமக்கல், திண்டுக்கல், விருதுநகர் ஆகிய 6 மாவட்டங்களுக்கும் அரசு மருத்துவ கல்லூரி அமைக்க மத்திய அரசு இன்று உத்தரவிட்டுள்ளது.

**தமிழ்நாட்டிற்கு ஒரே நேரத்தில் 6 அரசு மருத்துவ கல்லூரிகளுக்கு அனுமதி பெறுவது ஒரு வரலாற்று நிகழ்வு ஆகும்.** இதற்கென 1,950 கோடி ரூபாய்க்கான மதிப்பீட்டிற்கு அனுமதி வழங்கி, அதில் 1,170 கோடி ரூபாய் வழங்க மத்திய அரசு அனுமதியும் அளித்துள்ளது. தமிழ்நாடு அரசின் பங்காக 780 கோடி ரூபாய் வழங்கப்படும். இதுவரை வரலாறு கண்டிராத இந்த சிறப்புமிக்க அனுமதியை வழங்கிய மாண்புமிகு பாரத பிரதமர் அவர்களுக்கும் மத்திய அரசுக்கும் எனது மனமார்ந்த நன்றியை தமிழ்நாட்டு மக்கள் சார்பாக தெரிவித்துக் கொள்கிறேன்.

**K.பழனிசாமி**
**தமிழ்நாடு முதலமைச்சர்**

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**